# தலைஞாயிறு பேரூராட்சி

## நாகப்பட்டினம் மாவட்டம்

ந.க.எண்: 772/2021/அ1 நாள்: 25.04.2022

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு பேரூராட்சியில் **நமக்கு நாமே திட்டம் 2021–2022** மேற்கொள்ள கீழ்காணும் விவரபடி ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம்–1998 பிரிவு 16.ஈ மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள்–2000 விதிஎண்.33 கீழ் குறைந்த கொள்முதல் மதிப்பு விலக்கு பெறுகிறது.

தமிழ்நாடு அரசாணை எண்.103 நிதி (சம்பளம்) துறை, நாள் 11.04.2022–ன் படி கொள்முதல் மதிப்பு ரூ.25.00 லட்சத்திற்கும், கட்டுமான மதிப்பு ரூ.50.00 லட்சத்திற்கும் குறைவு என்பதால் நாளிதழ் விளம்பரத்திலிருந்து விலக்கு பெறுகிறது.

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி எண் | 772/2021/அ1 |
| ஒப்பந்தப்புள்ளிவரவேற்கும் அலுவலர்/அமைப்பின் பெயர் | செயல் அலுவலர்,<br>தலைஞாயிறு பேரூராட்சி,<br>நாகப்பட்டினம் மாவட்டம். |
| திட்டத்தின் பெயர் | நமக்கு நாமே திட்டம் 2021–2022 |

பணியின் விவரம்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை ரூ. | EMD@ 1% ரூ. |
|---|---|---|---|---|
| 1 | காந்தி ரோடு -ராஜன் வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டுதல் | 9.18 | 1500 +GST | 9180 |
| 2 | திருமாளம் சன்னதி தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 4.00 | 750 +GST | 4000 |
| 3 | ஓரடியம்புலம் பெருமாள் கோவில் தெற்கு தெரு - காரை வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டுதல் | 9.00 | 1500 +GST | 9000 |
| 4 | அழகு மாரியம்மன் கோவில் தெரு - ஆளடி வாய்க்கால் குறுக்கே சிறு பாலம் கட்டுதல் | 3.20 | 750 +GST | 3200 |

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கிடைக்கும் இடம் நாள் விவரம் | தலைஞாயிறு பேரூராட்சி அலுவலகம்<br>நாள்.25.04.2022 முதல் 20.05.2022 பிற்பகல் 3.00 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி நமூனா பதிவிறக்கம் செய்து கொள்ளும் இணையதளமுகவரி | https://townpanchayats.tn.gov.in/tender |
| நிரப்பப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுகொள்ளும் இடம் நாள் மற்றும் நேரம் | தலைஞாயிறு பேரூராட்சி அலுவலகம்<br>நாள்.20.05.2022 பிற்பகல் 3.00 மணி வரை |
| பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் இடம் நாள் மற்றும் நேரம் | பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் தலைஞாயிறு பேரூராட்சி அலுவலகத்தில் 20.05.2022 அன்று 3.30 மணிக்கு திறக்கப்படும். |
| பணி முடிவு காலம் | 60 நாட்கள் |

**ஒப்பந்ததாரர் தகுதிநிலை:**

1. தலைஞாயிறு பேரூராட்சியில் பதிவு செய்து 2022–2023 நிதி ஆண்டுக்கு புதுப்பிக்கப்பட்டு பதிவு நடப்பில் உள்ள மதிப்பீட்டிற்கு ஏற்ப நிலைக்கு குறையாத ஒப்பந்ததாரர்கள். புதிய ஒப்பந்ததாரர் பொறுத்த வரையில் தமிழ்நாடு அரசு துறை/நிறுவனம்/ வாரியம்/உள்ளாட்சிகளில் பதிவு செய்து 2022–2023 நிதி ஆண்டுக்கு புதுப்பிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிக்கு தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் விண்ணப்பிக்கலாம். எனினும் தலைஞாயிறு பேரூராட்சிக்கு ஒப்பந்ததாரர் பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டும்.

2. ஒப்பந்ததாரர் தொழில் நுட்ப கல்வி தகுதி B.E அல்லது இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும். அல்லது உரிய தொழில் நுட்ப பணியாளர்களை பணி அமர்த்துவதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.

3. தலைஞாயிறு பேரூராட்சி அல்லது அரசு துறை/ கழகங்கள்/வாரியங்கள்/உள்ளாட்சி அமைப்புகளில் 'கருப்பு பட்டியல்' கொண்டு வரப்பட்ட ஒப்பந்ததாரர் விண்ணப்பிக்க இயலாது.

4. வருமான வரி நிரந்தர கணக்கு எண் (PAN) பெற்றவராக இருக்க வேண்டும். 2022-2023 AY 2021-2022 FY வரை வருமான வரி அறிக்கை தாக்கல் செய்த நகல் இணைக்க வேண்டும்.

5. சரக்கு சேவைவரி கணக்கு எண் (GSTIN) பெற்றவராக இருக்க வேண்டும். 2021–2022 வரை அறிக்கை தாக்கல் செய்தவராகவும் நடப்பு ஆண்டில் ஏப்ரல்–2022 மாதம் வரை அறிக்கை தாக்கல் செய்த நகல் இணைக்க வேண்டும்.

6. பட்டியல் தொகை ECS மூலம் பெற்றுக்கொள்ள ஏதுவாக தேசியமயமாக்கப்பட்ட வங்கி கணக்கு புத்தக ஒளி நகல் இணைக்க வேண்டும்.

**7.ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம்**

பொதுவாக குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம் அளிக்கப்படும்.

**8.பிணையத் தொகை 2%**

வெற்றி பெற்ற ஒப்பந்ததாரர் முன்வைப்பு தொகை 1% பிணையத் தொகையாக மாற்றப்படும் மீதம் 1% தொகை ஒப்பந்ததாரர் பணி ஆணை பெறும் முன் செலுத்த வேண்டும் 15 நாட்களுக்குள் செலுத்த தவறினால் முன்வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படும்.

**9.பணி ஆணை**

பிணையத் தொகை செலுத்திய பின் பணி ஆணை வழங்கப்படும். பணி ஆணையில் குறிப்பிடும் நிபந்தனைகளுக்கு ஒப்பந்ததாரர் கட்டுப்பட வேண்டும்.

**10.ஒப்பந்த பத்திரம்**

பணி ஆணையில் கண்டுள்ள நிபந்தனைகளை ஏற்பதாக ரூ.20/– க்கான நீதி மன்ற முத்திரைதாளில் எழுதி பதிவு செய்யப்பட வேண்டும்.

**11.பணிகள் முன்னேற்றம்**

ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சரியான கால இடை வெளியில் பணிமுன்னேற்றம் காண்பிக்க வேண்டும். தவறினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. <u>பட்டியல் பிடித்தங்கள்</u>

1. வருமான வரி TDS தனிநபர் 1%
2. வருமான வரி TDS பிறர் 2%
3. சரக்கு சேவை வரி TDS 2%
4. கட்டுமான தொழிலாளர் நல சந்தா மதிப்பீட்டு தொகை 1%
5. தொழில் வரி ஆண்டுக்கு ரூ.2500%

(மேற்காணும் பிடித்தங்களில் மாற்றம் ஏற்படின் அதற்கு ஏற்ப பிடித்தம் செய்யப்படும்)

6. With held 5%

13. ஒப்பந்தக்காரர்கள் உரிய காலத்தில் வேலையை செய்து முடிக்கத் தவறினால் வேலை உத்திரவு ரத்து செய்யப்பட்டு மாற்று ஏற்பாட்டின் மூலம் வேலைகளை செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவ்வாறு நிறைவேற்றப்படுவதால் தலைஞாயிறு பேரூராட்சிக்கு ஏற்படும் இழப்பிற்கு ஒப்பந்தக்காரரே முழுப்பொறுப்பாவார். மேலும் ஒப்பந்தப்பதிவும் ரத்து செய்யப்படும்.

14. வேலைகள் ஆரம்பிக்கும் முன், வேலைகள் நடைபெறும் பொழுது மற்றும் வேலை முடிவடைந்த நிலை ஆகிய மூன்று நிலைகளில் கண்டிப்பாக புகைப்படங்கள் எடுத்து வேலைப்பட்டியலுடன் இணைக்கப்பட வேண்டும். புகைப்படங்கள் இணைக்காவிட்டால் தொகை வழங்கப்படமாட்டாது.

15. ஒப்பந்தக்காரர் செய்யும் வேலை மதிப்பு தொகையில் வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி, கட்டிட தொழிலாளர் நலநிதி மற்றும் பாதுகாப்பு கூடுதல் டேவணி ஆகியவைகளை என்ன விகிதத்தில் பிடித்தம் செய்ய வேண்டும் என்று அரசு ஆணை உள்ளதோ அதன்படி பிடித்தம் செய்து கொண்டு மீத தொகைக்கு ECS வழங்கப்படும்.

16. டெண்டர் படிவங்களில் அடித்தல், திருத்துதல் , ஏதும் இருக்கக் கூடாது .அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அதற்கு ஒப்பந்தக்காரரால் கையொப்பம்மிடப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டு இருக்க வேண்டும்.

17. ஒப்புக் கொள்ளப்படாத மற்றும் வேலைக் கிடைக்கப் பெறாத ஒப்பந்தக்காரர்களுடைய டெண்டர் டேவணி தொகை, மன்றத்தின் பரிசீலனைக்குப் பிறகு காசோலையாக வழங்கப்படும்.

18. வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர் சேகரம் செய்யும் பொருட்கள் மதிப்பீடு மற்றும் ஒப்பந்தப் படிவம் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள அளவுக் கணக்கு எண்ணிக்கை அளவின் படி (சைஸ்) –யும் இருக்க வேண்டும். அவ்வாறு செய்யாத சேகரங்களை நிராகரிக்க பேரூராட்சிக்கு உரிமை உண்டு.

19. ஒப்பந்தக்காரர் செலுத்தியிருக்கும் டேவணித் தொகையானது ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றப்பட்டு அந்நிதியாண்டுக்கான தணிக்கை அறிக்கை கிடைக்கப் பெற்று பிடித்தம் ஏதுமிருப்பின் பிடித்தம் செய்துக் கொண்டு மீதித் தொகை காசோலையாக வழங்கப்படும்.

20. ஒப்பந்தக்காரர் தணிக்கையின் முடிவிற்கு கட்டுப்பட்டவராவார்.

21. டெண்டர் வேலைக்கான ஷெட்டியூல் படிவம் பேரூராட்சி அலுவலகத்தில் அட்டவணையில் கண்ட கிரய தொகையை செலுத்தி 25.05.2022 மாலை 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

22. ஒப்பந்தப்பணியினை உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர் அல்லது செயல் அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து அவர்கள் முன்னிலையிலேயே செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய தவறினால் ஒப்பந்தப்பணி நிறுத்தப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

23. ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்படிவம் பெற தகுதி மற்றும் பொருளாதார தகுதி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, பொறியாளர் கையேட்டில் குறிப்பிட்டுள்ள தரப்படி ஒப்பந்தக்காரர்கள் இதில் கலந்து கொள்ளலாம்.

25. ஒப்பந்தக்காரர்கள் எடுக்கப்பட்ட வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவுக்குள் வேலை முடிக்கப்பட வேண்டும்.தவறினால் ஒப்பந்த விதிமுறைகளின்படி அபாரதம் விதித்து வசூலிக்க நேரிடும். மேலும், பொறியியல் விதிமுறைகளின்படி மேல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

26. Engineering Manual படி பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்தகாரர் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் (Penalty for slow progress) அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதித்து பட்டியல் தொகையில் ஈடு செய்யப்படும்.

27. பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தினையும், அரசு தொழில் நுட்பக்கல்லூரியில் ஆய்வு செய்த பின்னர் அறிக்கையினை பொறியாளர் அனுமதி பெற்று, அதன் பின்னரே பணிக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

28. மேற்படி திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் பொழுது, ஒவ்வொரு நிலையிலும் பணியின் தரம் உறுதி செய்யப்படும்.

29. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும், பணி நடைபெறும் போதும் மற்றும் பணி முடித்த பின்னரும் 4 அளவில் புகைப்படம் எடுக்கப்பட்டு அதனை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். எடுக்கப்படும் மூன்று புகைப்படமும் ஒரே இடத்தைக் காட்டும்படியாக இருத்தல் வேண்டும்.

30. பேரூராட்சிகளில் வேலைகள் தொடர்பாக அரசாணைகள், நடைமுறை விதிகள், திட்ட விதிமுறைகள் மற்றும் பேரூராட்சிகள் இயக்ககத்தின் மூலம் தெரிவித்த அறிவுரையின்படி வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

31. பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஒப்பந்தப்புள்ளிக்கு பகுதி பட்டியல் வழங்கும் போது 5% தொகை வைப்புத்தொகையாக ஒவ்வொரு பகுதி பட்டியலுக்கும் பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகை வழங்கப்படும்.

32. ஒப்பந்தப்புள்ளிகள் பதிவேட்டில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட அன்றே உரிய பதிவுகள் செய்து அன்றைய தேதியில் வருகை தந்திருக்கும் ஒப்பந்தகாரர்களிடம் ஒப்பம் பெறப்படும்.

33. பணி குறித்த விபரங்கள் அடங்கிய தரமான பலகைகள் 4 அடி x 2 1/2 அடி (1.20அ X 0.75அ) அளவில் வைக்கப்பட்டு, அதனை புகைப்படம் (Digital photo) எடுத்து இப்பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

34. மேலும் விதிமுறைகள் குறித்து தலைஞாயிறு பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

<u>பொது</u>

1. ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையின் எந்த ஒரு நிலையிலும் காரணம் குறிப்பிட்டோ காரணம் குறிப்பிடாமலோ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை திருத்தம் செய்திட/மாற்றி அமைத்திட/ஒத்தி வைத்திட/ இரத்து செய்திட/ ஒப்பந்தப்புள்ளி அழைக்கும் தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

**2. இந்த அறிவிப்பு ஒப்பந்தப்புள்ளி குறித்த புரிதலுக்கான சுருக்கமான அறிவிப்பு மட்டுமே. ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் Bid Document–இல் ஆங்கில மொழியில் குறிப்பிட்டுள்ளவையே அறுதியானது மற்றும் இறுதியானது.**

3. ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை குறித்து கூடுதல் தகவல் வேண்டுமெனில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

4. தொல்பொருட்கள்/புதையல் இருப்பின் உடன் தகவல் தெரிவிக்க வேண்டும்.

5. மண்/கனிமம் ஆகியவற்றை வேறு இடத்திற்கு கொண்டு செல்லவோ அல்லது விற்பனை செய்யவோ கூடாது.

**செயல் அலுவலர்/ ஒப்பந்தப்புள்ளி**
**அழைப்பு அலுவலர்,**
**தலைஞாயிறு பேரூராட்சி,**
**நாகப்பட்டினம் மாவட்டம்.**

**பெறுநர் :**

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், தலைஞாயிறு பேரூராட்சி.

**நகல்:**

1. அலுவலக விளம்பர பலகைக்கு.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் அலுவலகம் , மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர் அவர்களுக்கு தகவலுக்காக
4. இளநிலை பொறியாளர், பேரூராட்சிகள் பிரிவு, வேளாங்கண்ணி தொகுப்பு அவர்களுக்கு தகவலுக்காக.
5. உள்ளூர் மற்றும் வெளியூர் அலுவலகங்களுக்கு விளம்பரத்திற்காக அனுப்பப்படுகிறது.